சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பி.இ./பி.டெக் மற்றும் முதுகலை பட்டப் படிப்பு எம்.பி.ஏ., / எம்.சி.ஏ, எம்.இ./ எம்.டெக். மாணவர் சேர்க்கையில் தமிழ்நாட்டில் பயின்ற இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை சேர்க்க அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.143 நாள் 14.6.2011

வைகாசி 31,
திருவள்ளுவர் ஆண்டு 2042.
படிக்கப்பட்டவை

1) அரசாணை (1டி) எண்.207, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 31.8.2009.
2) அரசாணை (நிலை) எண்.172, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 29.6.2010.
3) தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.8401/இசிஏ1/ 2011, நாள் 11.4.2011.

------

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010ஆம் கல்வியாண்டில் இலங்கை அகதிகள் முகாம்களிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்றுடனும், அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச் சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பொறியியல் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்றபின் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மிகாமலும், பொதுப்பிரிவின் கீழ் காலியிடங்கள் ஏதும் இருப்பின் அதில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க பரிசீலிக்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் தமிழக பள்ளிக்கூடங்களில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை பொதுப்பட்டியலில் தரவரிசையின் அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம் என அரசு ஆணையிட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி ஆணையர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளைப் பின்பற்றி தமிழக பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு முடித்து தேர்வு பெற்று தகுதி பெற்ற இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஒற்றைச் சாளர கலந்தாய்வில் பொதுப் பிரிவின் கீழ் தரவரிசையில் சேர்க்கப்பட்டு நேரடி இரண்டாமாண்டிற்கான பொறியியல் பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்தும், தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியில் கல்லூரிகளில் பட்டப் படிப்பு முடித்து தேர்வு பெற்று தகுதி பெற்ற இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு எம்.இ./எம்.டெக். / எம்.ஆர்க். சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் பொதுப் பிரிவின் கீழ் தரவரிசையின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்து தெளிவுரை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கோரிக்கையினை நன்கு பரிசீலனை செய்த அரசு, 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் இலங்கை அகதிகள் முகாம்களிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பி.இ./பி.டெக் மற்றும் முதுகலை பட்டப் படிப்பு எம்.பி.ஏ., / எம்.சி.ஏ./ எம்.இ./ எம்.டெக்/ எம்.ஆர்க் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் மற்றும் எம்.பி.ஏ./ எம்.சி.ஏ சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்றுடனும், அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப்பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச் சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பொறியியல் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்றபின் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மிகாமலும், பொதுப்பிரிவின் கீழ் காலியிடங்கள் ஏதும் இருப்பின் அதில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க பரிசீலிக்குமாறும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரை கேட்டுக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
இயக்குநர், மறுவாழ்வுத்துறை, சென்னை–5 (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25
பதிவாளர், அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், சென்னை/
திருச்சிராப்பள்ளி/ கோயம்புத்தூர்/ திருநெல்வேலி / மதுரை.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
பொது (மறுவாழ்வு) த்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.